பக்கங்கள்: 07

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 21 ஞாயிற்றுக்கிழமை 03.04.2022 கதிர் 18

மின்வெட்டை நிறுத்தக் கோரி

## கோட்டா வீட்டுக்கு முன்பாக ஆண் ஒருவர் தற்கொலை!

நுகேகொடை - மிரிஹானவில் உள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வீட்டுக்கு முன்பாக 53 வயதுடைய ஆண் ஒருவர் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் இதனைத் தெரிவித்துள்ளது.

நாட்டில் தினமும் 2

# அரச சர்வாதிகாரத்துக்கு எதிராக கொழும்பில் எதிரணி போராட்டம்

பேரணியைத் தடுத்து நிறுத்தியது பொலிஸ் படை



**கொழும்பு, ஏப். 03**

**மக்கள் விரோத அரசின் தன்னிச்சையானசர்வாதிகாரநடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களின் பங்கேற்புடன் இன்று கொழும்பு சுதந்திர சதுக்கத்துக்கு அருகில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.**

**எனினும், அங்கிருந்து சுதந்திர சதுக்கத்தை நோக்கி ஆரம்பமான பேரணியைப் பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.** 2


## சரிகின்றது கோட்டா அரசின் பெரும்பான்மை; நாடாளுமன்றக் கூட்டத் தொடர் ஒத்திவைப்பு?



நாடாளுமன்றத்தில் ஆளும்கட்சியின் பெரும்பான்மை குறையலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளதால் அதைச் சமாளிக்க நாடாளுமன்றக் கூட்டத்தொடரை குறுகிய காலத்துக்கு ஒத்திவைப்பது குறித்து அரசு அவதானம் செலுத்தி வருகின்றது என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்றத்தில் 2

## ஊரடங்கால் முற்றாக முடங்கிய யாழ். நகர்!



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் இன்று மூடப்பட்டுள்ளதோடு வீதிகள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

நாடளாவிய ரீதியில் நேற்று சனிக்கிழமை 2

## சகல சமூக வலைத்தளங்களும் வழமைக்கு!

முடக்கத்துக்கு எதிராக நாமல் போர்க்கொடி



இலங்கையில் முடக்கப்பட்டுள்ள சகல சமூக வலைத்தளங்களும் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு வழமைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன என்று தொழில்நுட்ப அமைச்சு அறிவித்துள்ளது.

நேற்றிரவு முதல் பாதுகாப்பு அமைச்சின் 2

## ஊரடங்குச் சட்ட உத்தரவை மீறிய 664 பேர் மேல் மாகாணத்தில் கைது

பொலிஸ் ஊரடங்குச் சட்ட உத்தரவை மீறிய மீறிய 664 பேர் மேல் மாகாணத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்றிரவு 10 மணி முதல் இன்று அதிகாலை 6 மணி வரை இந்த நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## வடக்கு, கிழக்கு உட்பட 4 மாகாணங்களின் பாடசாலைகளுக்கு நாளை தொடக்கம் லீவு

நாளை முதல் வடக்கு, தெற்கு, வடமேல் மற்றும் கிழக்கு மாகாணங்களின் பாடசாலை மாணவர்க ளுக்கு முதலாம் தவணை விடுமுறை வழங்கப்படவுள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், குறித்த மாகாணங்களில் உள்ள பாடசாலைகளின் ஆசிரியர்கள் சேவைக்குச்சமுகமளிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஏனைய மாகாணங்களின் பாடசாலை மாணவர்கள் தவணைப் பரீட்சைக்கு மாத்திரம் பாடசாலைக்கு சமுகமளிக்க வேண்டும் என வும் கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## 12 இந்திய மீனவர்கள் நெடுந்தீவில் சிக்கினர்



(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 12 இந்திய மீனவர்கள் 2

# அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்ட பேராதனைப் பல்கலை மாணவர்கள் மீது தாக்குதல்





பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு அருகில் இன்று அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்கள் மீது பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டனர்.

கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களைப் பொலிஸார் கலைத்தனர்.

நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கோரி பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்தில் 2

### அரசின் சர்வாதிகாரத்தை எதிர்த்து ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திர சதுக்கத்துக்குச் செல்லும் சகல நுழைவு வீதிகளையும் வீதித்தடைகள் மற்றும் காவலரண்கள் தடைகளை ஏற்படுத்தி பொலிஸாருடன் பெருமளவு விசேட அதிரடிப் படையினரும் குவிக்கப்பட்டிருந்தனர். எதிரணியினரின் ஆர்ப்பாட்டப் பேரணி முன்னோக்கிச் செல்ல அவர்கள் அனுமதிக்கவில்லை.

இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், பாதுகாப்புத்துறையினருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரனும் பங்கேற்றிருந்தார்.

நாட்டில் அவசரகாலச் சட்டம் மற்றும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள வேளையில் இவ்வாறு எதிரணியினர் ஆர்ப்பாட்டப் பேரணியை முன்னெடுப்பது முறையற்றது எனவும், அதனால் அதைத் தடுத்து நிறுத்தினோம் எனவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

### சரிகின்றது கோட்டா .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் முக்கிய வேலைத்திட்டங்கள் இல்லை எனத் தெரிவித்து புதுவருடத்தை முன்னிறுத்தி இவ்வாறு ஒத்திவைக்க முடியும் என்று அரச உயர் மட்டத்தில் உள்ள சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

இதேவேளை, விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் தலைமையில் ஆளும் அரசின் பெரும்பான்மையை இல்லாமல் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த வாரம் இது தொடர்பாக கொழும்பில் உள்ள மூன்று இடங்களில் பேச்சு நடத்தப்பட்டுள்ளன.

தங்களது பெரும்பான்மையைச் சபாநாயகருக்கு எழுத்து மூலம் காட்டி அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டுவருவதற்கு இந்தப் புரட்சிகர குழு எதிர்பார்த்திருக்கின்றது என நாடாளுமன்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

### ஊரடங்கால் முற்றாக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாலை 6 மணி முதல் நாளை திங்கட்கிழமை காலை 6 மணி வரை ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாணம் நகரம் வெறிச்சோடிக் காணப்படுகின்றது.

யாழ்ப்பாணம் நகருக்குள் நுழையும் பிரதான சந்திகள், வீதிகளில் பொலிஸார் ஆங்காங்கே கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

### 12 இந்திய மீனவர்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இன்று அதிகாலை நெடுந்தீவு அருகே இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர் ஒரு படகையும் அதிலிருந்த 12 மீனவர்களையும் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட மீனவர்களை மயிலிட்டிக்கு அழைத்து வந்து கடற்தொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### அரசுக்கு எதிராக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து பேராதனை - கலஹா சந்தி வரை மாணவர்கள் பேரணியாகச் செல்ல முற்பட்டபோது பொலிஸாரால் இவ்வாறு கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஊரடங்கு உத்தரவை மீறி இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதால் அதற்கு எதிராகத் தாம் நடவடிக்கைகளை எடுத்தனர் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சகல சமூக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கைக்கமைய சமூகவலைத்தளங்கள் முடக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

இதேவேளை, சமூக வலைத்தளங்கள் முடக்கப்பட்டதைத் தாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்று இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இன்று காலை தெரிவித்திருந்தார்.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை இட்டு அவர் இதனைக் குறிப்பிட்டிருந்தார்.

இதில், சமூக வலைத்தளங்களைத் தடுப்பது போன்ற நடவடிக்கைகள் பயனற்ற செயல் என்றும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

தானும் தற்போது VPN வழிமுறையைப் பயன்படுத்தி சமூக வலையமைப்புகளைப் பயன்படுத்துகின்றார் என்றும் நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்திருந்தார்.

எனவே, மேலும் நெருக்கடிகளை உருவாக்காமல், பிரச்சினைகளுக்கான தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் டுவிட்டர் பதிவின் மூலம் கோரியிருந்தார்.

### கோட்டா வீட்டுக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்படும் மின்வெட்டை உடனடியாக நிறுத்துமாறு கோரி குறித்த நபர் மின்மாற்றியில் ஏறினார் எனவும், இதன்போது மின்சாரம் தாக்கி அவர் உயிரிழந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம் -
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## அரசின் தப்புக் கணக்கு

அடக்குமுறை ஆட்சியை ஒன்றில் முதல் ஆப்பு விழுவது கருத்து வெளியிடும் சுதந்திரத்துக்கு. அடுத்து ஒன்றுகூடும் சுதந்திரத்துக்கு.

இருண்ட ஆட்சியில் முதலில் மரிப்பது உண்மை. கொடி கட்டிப் பறப்பது கோயபல்ஸ் பாணி பிரச்சாரம் என்ற பொய்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி அதிகாரத்தில் அதுதான் இப்போது கட்டவிழ்கின்றது. மக்களின் கருத்து வெளியிடும் சுதந்திரத்துக்கு – கருத்துப் பரிமாறும் உரிமைக்கு – ஒன்று கூடும் உரித்துக்கு – வேட்டு வைக்கும் விதத்தில் சமூக ஊடகங்களை முடக்கும் கேவலத்தை அரங்கேற்றி இருக்கின்றது ஆட்சி அதிகாரம்.

மக்களுக்கு அவர்களின் கருத்தைச் சுதந்திரமாக வெளிப்படுத்தும் ஜனநாயக ரீதியான உரிமை மறுக்கப்பட்டிருகின்றது. ஆட்சி பீடத்தின் எதேச்சாதிகாரத்துக்கு எதிரான மக்களின் சீற்றத்தை – எழுச்சியை – அவர்கள் ஒன்று கூடி ஜனநாயக முறையில் தெரிவிப்பதற்கான வாய்ப்பைத் தனது அடக்குமுறை நடவடிக்கை மூலம் மறுத்திருக்கின்றது கோட்டாபயவின் அரசு. ஊரடங்கு பிறப்பித்து, மக்களை வீடுகளுக்குள் முடக்குவதன் மூலம் மக்களின் கருத்தியலை மூடி மறைத்து விடலாம் என்பது அடக்குமுறையாளர்களின் வழமையான சிந்தனைதான். அந்த நப்பாசையை நடைமுறைப்படுத்திப் பார்ப்பதில் கோட்டாவின் நிர்வாகமும் விதிவிலக்கல்ல.

தன்னுடைய மோசமான ஆட்சி முறையால் – தீர்க்கதரிசனமற்ற பொருளாதாரக் கொள்கை போக்கினால் – பேரினவாத வெறித்தன நடவடிக்கைகளால் – முழு நாட்டையும் மீளவே முடியாத சிக்கலில் கொண்டு போய் மாட்டியிருக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசு, அது தொடர்பில் மக்களின் கருத்துக்களை செவிமடுக்கத் தயாரில்லை என்பதும் கண்கூடு.

மக்களின் அமைதி வழிப் போராட்டங்களுக்கும் கூட இடமளிக்காமல், அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தி, ஊரடங்கைப் பிறப்பித்து, சமூக ஊடகங்களை முடக்கி, நாட்டைப் பெரும் குழப்ப நிலைக்குள் ஆழ்த்தியிருக்கின்றது கோட்டாபயவின் ஆட்சிப்பீடம்.

ஏற்கனவே நொந்து, நூலாகி, நைந்து போயிருக்கும் நாட்டின் பொருளாதார நிலைமையை இந்த அடக்குமுறை நடவடிக்கைகள் மேலும் சீரழிக்கப் போகின்றன என்பது தெளிவு.

ஆட்சித் தரப்புக்கு எதிரான மக்களின் எழுச்சி தொடர்பில் கோட்டாபய அரசின் பிரதிபலிப்பு விடயத்தில் இரண்டு விடயங்கள் உண்மை.

ஒன்று – ஆட்சிப்பீடத்துக்கு எதிரான மக்கள் கருத்தியல் எல்லை மீறி விட்டது என்பது ஆட்சித் தலைமைக்கு நன்கு தெரியும். வாக்குச்சீட்டுகள் மூலம் மக்கள் வழங்கிய ஐந்து வருட ஆணையை இரண்டு வருடங்களுக்குள்ளேயே தாங்கள் தொலைத்து விட்டார்கள் என்பது அரசுத் தலைமைக்கு தெளிவாகப் புரியும்.

அடுத்தது – ஏதேனும் வழி பண்ணி எஞ்சிய இரண்டரை, மூன்று வருடங்களுக்கும் அதிகாரத்திலிருந்து பதவி சுகத்தை அனுபவித்து விட வேண்டும் என்பதில் ஆட்சித் தலைமை கவனமாகவும் தீவிரமாகவும் இருக்கின்றது என்பது.

ஐந்து வருட ஆட்சிக்குத் தெரிவு செய்யப்பட்டோம் என்ற உரித்தைக் காட்டி ஆட்சியில் நீடிப்பது என்றால், இந்தக் குறுகிய காலத்தில் மக்களின் கருத்தியல் தங்களுக்கு மாறாகத் திரும்பிவிட்டது என்ற உண்மையை வெளிப்படுத்த விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற நன்கு புரிதல் கோட்டாபய அரசுக்கு உண்டு.

அதனால்தான் மக்களின் அந்தக் கருத்தியலை அப்பட்டமாக வெளிப்படுத்தும் மக்கள் போராட்டங்கள் மற்றும் எழுச்சி நிகழ்வுகளை தடுத்து, சமூக ஊடகங்களை முடக்கியிருக்கின்றது ஆட்சிப்பீடம்.

மக்களின் கருத்தியலை இத்தகைய அடக்குமுறை நடவடிக்கைகள் மூலம் மூடி மறைத்து ஒடுக்கி விடலாம் எனப் பகல் கனவு காண்பது, சூரியனை சாக்கு போட்டு மூடி மறைத்து விடலாம் என கணக்கு போடுவதற்கு ஒப்பானதாகும்.

# ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் முதலாம் ஆண்டு நினைவு பேருரை நிகழ்வு





மன்னார் மறைமாவட்ட முன்னாள் ஆயர் அமரர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் முதலாம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு ஆண்டகையின் நினைவுப் பேருரை மன்னாரில் நேற்று (சனிக்கிழமை) மாலை இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் வி.எஸ். சிவகரன் தலைமையில் நேற்று (சனிக்கிழமை) மாலை 3 மணியளவில் மன்னார் நகர மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் விருந்தினர்களாக மட்டக்களப்பு திருமலை ஓய்வு நிலை ஆயர் பேரருட் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, யாழ்.மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி ப.யோ. ஜெபரட்ணம் அடிகளார், மனித உரிமை செயற்பாட்டாளர் அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார், யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் துறை பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டமையோடு, அருட்தந்தையர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது மறைந்த மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் உருவப் படத்துக்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து மறைந்த மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் மேதகு இராயப்பு ஜோசேப்பு ஆண்டகையின் முதலாம் ஆண்டு நினைவு பேருரை நூலை ஓய்வுநிலை ஆயர் பேரருட் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை வழங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து நினைவுப் பேருரைகள் இடம்பெற்றன.

நினைவுப் பேருரையை மனித உரிமை செயற்பாட்டாளர் அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் துறை பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன், நாடாளுமன்றமுன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

நினைவுப் பேருரையினை மனித உரிமை செயற்பாட்டாளர் அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், யாழ். பல்கலைக் கழக அரசறிவியல் துறை பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.





# கராத்தே போட்டியில் பதக்கங்களை வென்று வவுனியா வீர, வீராங்கனைகள் சாதனைகள்

வடக்கு கிழக்கு மாகாண ரீதியாக நடத்தப்பட்ட கராத்தே போட்டியில் வவுனியா வீர வீராங்கனைகள் நேற்று வெற்றி பெற்று பதக்கங்களைத் தமதாக்கிக் கொண்டுள்ளனர்.

இலங்கை கராத்தே சம்மேளனத்தால் வடக்கு கிழக்கு இரு மாகாணங்களும் இணைந்து நடத்திய கராத்தே சுற்றுப்போட்டி நேற்று (சனிக்கிழமை) திருகோணமலை மாகீசர் உள்ளக விளையாட்டு அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. இந்தப் போட்டியில் வவுனியாவை சேர்ந்த 11 வீரர்கள் பங்குபற்றியிருந்தனர். இந்தப் போட்டியில் வவுனியா தினேஸ் தற்காப்பு கலை பள்ளி வீர வீராங்கனைகள் பதக்கங்களை சுவீகரித்து வவுனியா மண்ணிற்குப் பெருமையைச் சேர்த்துள்ளனர். இந்தக் கழகத்தின் தலைமை ஆசிரியராக சென்சி டி.பி தினேஷ் (5 ஆவது டான்) அவர்களின் மேற்பிரிவு மாணவர்களும் துணைக் கழகத்தின் பயிற்சி ஆசிரியரான சென்சி ஜி.ஞானகீதன் (3 ஆவது டான்) அவர்களின் மாணவர்களும் பதக்கங்களை வென்றமை குறிப்பிடத்தக்கது.

# பட்டானிச்சூரில் வாகன விபத்து!

ஒருவர் படுகாயம்





வவுனியா மன்னார் – பட்டானிச்சூர் பகுதியில் வான் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்தநிலையில்வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். வீதி ஓரத்தில் நின்ற வான் பிரதான வீதிக்குச் செல்ல முற்பட்ட போது, மன்னார் வீதியூடாக வவுனியா நகர் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் வானுடன் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளின் சாரதி படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது இன்று வாக்கெடுப்பு இம்ரான்கானுக்கு '3 சாய்ஸ்' பாகிஸ்தான் ராணுவம் அதிரடி



பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் இன்று நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட உள்ள நிலையில், தன்னிடம் மூன்று வாய்ப்புகள் மட்டுமே இருக்கின்றன என அவர் கூறியுள்ளார். பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள பொருளாதார சீர்குலைவால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர். இதன் காரணமாக, பிரதமர் இம்ரான் கான் தலைமையிலான அரசு மீது எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்துள்ளன. இதன் மீதான வாக்கெடுப்பு இன்று நடைபெற உள்ளது. இதில், பெரும்பான்மையை நிரூபிக்கவில்லை என்றால் இம்ரான் கான் அரசு கவிழும்.

இம்ரான்கான் அரசுக்கு வழங்கி வந்த ஆதரவை பாகிஸ்தான் எம்.கியூ.எம். கட்சி ஏற்கனவே விலக்கிக் கொண்டு எதிர்க்கட்சி பக்கம் சாய்ந்து விட்டது. இதனால், நாடாளுமன்றத்தில் இம்ரான் கான் கட்சி கூட்டணியின் பலம் 179இல் இருந்து 164 ஆக குறைந்துள்ளது. அதேநேரம், எதிர்க்கட்சிகளின் பலம் 177 ஆக அதிகரித்துள்ளது. இதனால், இம்ரான் கான் வாக்கெடுப்பை சந்திக்காமல் பதவி விலகி விடுவார் என கருதப்பட்ட நிலையில், 'கடைசி பந்து வரை நின்று ஆடுவேன்' என்று அவர் கூறிவிட்டார். இந்நிலையில், தொலைக் காட்சியில் நாட்டு மக்களுக்கு நேற்று முன்தினம் உரையாற்றிய இம்ரான் கான், 'ராணுவம் எனக்கு மூன்று வாய்ப்புகளை வழங்கியிருக்கிறது.

நம்பிக்கையில்லாப் பிரேரணை, விரைவில் தேர்தல், பதவியிலிருந்து ராஜினாமா ஆகிய வாய்ப்புகள் என் முன்பாக இருக்கின்றன. என் உயிருக்கு அச்சுறுத்தல் இருக்கிறது. அன்னிய சக்திகளுடன் சேர்ந்து கொண்டு எதிர்க்கட்சிகளும் என்னை கொலை செய்ய முயல்கின்றன. என்னை மட்டுமல்லாமல் என் மனைவியையும் கொலை செய்யத் திட்டமிட்டுள்ளனர். நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றி பெற்றாலும் கூட, கூட்டணியில் இருந்து விலகி எதிர்க்கட்சிகளுடன் கைகோர்த்த கட்சிகளுடன் இணைந்து இனிமேல் என்னால் பணியாற்ற முடியாது. இதற்கு, நாடாளுமன்ற தேர்தலை முன்கூட்டியே நடத்துவது தான் சிறந்த வழி. நம்பிக்கையில்லாப் பிரேரணை சதி இருக்கிறது. கடந்தாண்டு ஆகஸ்ட் மாதமே இது பற்றி எனக்குத் தெரியும். சில எதிர்க்கட்சி தலைவர்கள் தூதரகங்களுக்கு சென்று வந்தனர் என தகவல் வந்தது. ஹூசைன் ஹக்கானி போன்ற தலைவர்கள் லண்டனில் நவாஸ் ஷெரீப்பை சந்தித்து பேசினர்,' என்று கூறியுள்ளார்.

### இந்தியாவுடன் சமரசம் பாக். தளபதி விருப்பம்

இஸ்லாமாபாத்தில் நேற்று நடந்த பாதுகாப்பு மாநாட்டில் பாகிஸ்தான் ராணுவ தளபதி கமர் பாஜ்வா பேசுகையில், "காஷ்மீர் உள்பட இந்தியா உடனான அனைத்து பிரச்சினைகளுக்கும் பேச்சின் மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். இதில் முன்னேற்றம் காண இந்தியா விரும்பினால் நாங்களும் தயார். அதேபோல், அமெரிக்கா-பாக். இடையே நீண்ட காலமாக சிறப் பான உறவு உள்ளது. ஆனால், கோஷ்டி அரசியல் செய்வதில் எங்களுக்கு விருப்பம் இல்லை,' என்று தெரிவித்தார்.

### வீதிக்கு வந்து போராட அழைப்பு

தொலைக்காட்சியில் பேசிய இம்ரான் கான், 'என் மீது எதிர்க்கட்சிகள் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை எதிர்த்து பாகிஸ்தான் மக்கள் இன்றும், நாளையும் வீதிக்கு வந்து போராட வேண்டும். இது போன்ற சம்பவம் வேறொரு நாட்டில் நடந்திருந்தால், இந்நேரம் மக்கள் வீதிக்கு வந்து போராட்டத்தில் இறங்கி இருப்பார்கள். இந்த தேசத்தின் நலனுக்காகவும், உங்கள் மனச்சாட்சிக்காகவும் நீங்கள் இதை செய்ய வேண்டும். வெளிநாட்டு சக்திகளின் சதிக்கு எதிராக பாகிஸ்தான் வாலிபர்கள் குரல் எழுப்ப வேண்டும்,' என அழைப்பு விடுத்தார்.



## அதிகரிக்கத் தொடங்கிய வைரஸ் பாதிப்பு;

# உலகளவில் பாதிப்பு எண்ணிக்கை 49.10 கோடியாக உயர்ந்துள்ளது

## 61.74 லட்சம் பேர் உயிரிழப்பு

உலகம் முழுவதும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு வருபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வரும் நிலையில் சற்று முன் வெளியான தகவலின் படி உலகம் முழுவதும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கை 49.10 கோடியாக அதிகரித்துள்ளது

உலகம்முழுவதும்491,017,722 பேர் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என உலக சுகாதார மையம் அறிவித்துள்ளது.

மேலும் உலகம் முழுவதும் கொரோனாவிற்கு 6,174,310 பேர் மரணமடைந்துள்ளனர் என்றும், உலகம் முழுவதும் கொரோனாவில் இருந்து 425,589,539 பேர் மீண்டனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது உலகம் முழுவதும் 59,253,873 ஆக்டிவ் கேஸ்கள் உள்ளன. அமெரிக்காவில் கொரோனாவால் பாதிப்பு அடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 81,826,371 என அதிகரித்துள்ளது. அமெரிக்காவில் பலியானோர் எண்ணிக்கை 1,008,159 என்பதும் குணமானோர் எண்ணிக்கை 65,525,974 என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிரேசில் நாட்டில் கொரோனாவால் பாதிப்பு அடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 29,995,638 என அதிகரித்துள்ளது. பிரேசில் நாட்டில் பலியானோர் எண்ணிக்கை 660,192 என்பதும் குணமானோர் எண்ணிக்கை 28,758,676 என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் கொரோனாவால் பாதிப்பு அடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 43,027,998 என அதிகரித்துள்ளது. இந்தியாவில் பலியானோர் எண்ணிக்கை 521,374 என்பதும் குணமானோர் எண்ணிக்கை 42,492,326 என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ரஷ்யாவுக்கு எதிராக உக்ரைனுக்கு தொடர்ந்து ஆயுத உதவிகளை வழங்கும் அமெரிக்கா

## ரூ.2,000 கோடி ராணுவ உதவி வழங்க ஒப்புதல்

ரஷ்யா- உக்ரைன் போரில் உக்ரைனுக்கு ஆதரவு தெரிவித்து வரும் அமெரிக்கா, அந்நாட்டுக்கு மேலும் 2,000 கோடி ரூபாய்க்கு ராணுவ உதவிகளை வழங்க ஒப்புதல் தெரிவித்துள்ளது. உக்ரைன் - ரஷ்யா இடையே இன்று 38ஆவதுநாளாக போர் நடந்து வருகிறது. ரஷ்ய படைகளின் தாக்குதலுக்கு உக்ரைன் ராணுவமும் தக்க பதிலடி கொடுத்து வருகிறது.

மேலும் ரஷ்யாவின் கட்டுப் பாட்டில் இருந்த சில பகுதிகளை உக்ரைன் படைகள் மீண்டும் தங்கள் கட்டுப் பாட்டில் கொண்டு வந்துள்ளன.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பால் உலகளவில் எரிவாயு மற்றும் உணவுப் பொருள்களின் விலை உயர்ந்துள்ளது என்றும் இதற்கு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் தான் காரணம் என்றும்



அமெரிக்க அதிபர் ஜோ பைடன் குற்றம்சாட்டி உள்ளார். இந்த போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ராணுவ ஆயுதங்கள், தளவாடங்கள் உள்ளிட்ட பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றன. அந்த வகையில் உக்ரைனுக்கு ஏற்கனவே ஒன்றரை பில்லியன் டொலர் மதிப்பிலான ராணுவ ஆயுதங்கள் உள்ளிட்ட உதவிகளை அமெரிக்கா வழங்கி உள்ளது.

இந்நிலையில் உக்ரைனுக்கு மேலும் 300 பில்லியன் டொலர் மதிப்பிலான ராணுவ ஆயுதங்கள் உள் ளிட்ட உதவிகளை வழங்க அமெரிக்கா முடிவு செய்துள் ளது. இது தொடர்பான அறிவிப்பை அமெரிக்கா வின் ராணுவ தலைமை யிடமான பென்டகன் இன்று அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பின் மூலம் உக்ரை னுக்கு ராணுவ உபகர ணங்கள், வெடிபொருள்கள் ரொக்கெட்டுகள், மருந்து பொருள்கள் உட்பட பல்வேறு ராணுவ ஆயு தங்களை அமெரிக்கா வழங்கவுள்ளது.

# ஒஸ்கர் விருது அமைப்பிலிருந்து வில் ஸ்மித் பதவி விலகல்: 'பளார்' விவகாரத்தால் திடீர் முடிவு



ஒஸ்கர் விருது அமைப்பிலிருந்து ஹாலிவுட் நடிகர் வில் ஸ்மித் பதவி விலகியுள்ளார். சக நடிகரை அறைந்த விவகாரத்தை தொடர்ந்து இந்த முடிவை அவர் எடுத்துள்ளார் என கூறப்படுகிறது. அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடந்த 94ஆவது ஒஸ்கர் விருதுகள் வழங்கும் விழாவில் சிறந்த நடிகருக்கான விருதை, 'கிங் ரிச்சர்ட்' என்ற படத்துக்காக ஹாலிவுட் நடிகர் வில் ஸ்மித் வென்றார். முன்னதாக இந்நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிக் கொண்டிருந்த நடிகர் கிறிஸ் ராக், மேடையில் நகைச்சுவையாக பேசிக்கொண்டிருந்தார். அவர் நடிகர் வில் ஸ்மித்தின் மனைவி நடிகை ஜடா பிங்கெட் ஸ்மித்தின் தலைமுடி மற்றும் உடல்நிலை குறித்து கிண்டலடித்து பேசினார். இதனால் ஆத்திரமடைந்த வில் ஸ்மித், மேடையை நெருங்கி தொகுப்பாளர் கிறிஸ் ராக்கின் முகத்தில் பளாரென அறைந்து, விழா அரங்கை அதிர்ச்சிக்குள்ளாக்கினார். யாரும் எதிர் பார்க்காத இச்சம்பவம் தொடர்பாக சர்வதேச அளவில் பரபரப்பாக பேசப்பட்டது. தொடர்ந்து வில் ஸ்மித், தான் சற்று உணர்ச்சிவசப்பட்டு விட்டேன் எனவும், தனது செயலால் தான் பெரும் சங்கடம் அடைந்திருக்கிறேக் எனவும் அதற்கு மன்னிப்பு கோரினார். இது தொடர்பாக ஆஸ்கர் அகாடமி அளித்த விளக்கத்தில், 'தொடர்ந்து அகாடமியின் நடத்தை விதிகளை மீறியதால், வில் ஸ்மித்மீது ஒழுங்கு நடவடிக்கை விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுபற்றி ஏப்ரல் 18ஆம் திகதி நடக் கும் கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும்' என்றும் கூறியிருந் தது. இந்நிலையில், தற்போது மேற்கண்ட ஒஸ்கா விருதை நடத்தும் அமைப்பின் பதவியை திடீரென்று வில் ஸ்மித் ராஜினாமா செய்துள்ளார். கிறிஸ் ராக்கின் கன்னத்தில் அறைந்த விவகாரத்தில் நடவடிக்கை எடுக்கப்படவிருந்த நிலையில், தற்போது வில் ஸ்மித் ராஜினாமா செய்துள்ளமை ஹாலிவுட்டில் பெரும் பர பரப்பை ஏற்படுத்தி இருக்கிறது. இந்நிலையில், அவரது ராஜினாமாவை ஒஸ்கர் அக்கடமி ஏற்றுக்கொண் டுள் ளது. விரைவில் வில் ஸ்மித் மீது ஒழுங்கு நடவ டிக்கை மேற்கொள் ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாநில சுயாட்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக ஸ்டாலினுக்கு அழைப்பு விடுத்த கேரள அமைச்சர்



கேரள மாநிலத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி மாநில சுயாட்சி மாநாடு நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் பங்கேற்க பல்வேறு கட்சிகளின் தலைவர்களுக்கு கேரளா சார்பில் அந்த மாநில அமைச்சர்கள் அழைப்பு விடுத்து வருகின்றனர்.

தி.மு.க. அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினை கேரள அமைச்சர் ராதாகிருஷ்ணன் இன்று காலை சந்தித்தார். அப்போது மாநில சுயாட்சி மாநாட்டில் கலந்துகொள்ளும்படி அவர் அழைப்பு விடுத்தார். அப்போது பொதுச் செயலாளர் துரைமுருகன், பொன்முடி உள்ளிட்ட கட்சி நிர்வாகிகளும் உடனிருந்தனர்.

## இலங்கை மக்களின் பசியை போக்குவதற்காக 40 ஆயிரம் தொன் அரிசி அனுப்பியது இந்தியா



இலங்கையின் உணவு தட்டுப்பாட்டைப் போக்குவதற்காக இந்தியா சார்பில் 3 லட்சம் தொன் அரிசி அனுப்பப்படவுள்ளதாகவும், இதில் முதல் கட்டமாக 40 ஆயிரம் தொன் அரிசி அனுப்பப்படுகிறது என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

தென்னிந்தியத்துறைமுகங்களில் இருந்து இலங்கைக்கு சரக்கு கப்பல்கள் மூலம் அரிசி அனுப்பும் நடவடிக்கை தொடங்கப்பட்டிருக்கிறது. அடுத்த சில நாள்களில் சரக்குக் கப்பல்கள் இலங்கையை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியா சார்பில் சரக்கு கப்பலில் அனுப்பி வைக்கப்பட்ட 40 ஆயிரம் தொன் டீசல் இலங்கையை அடைந்துள்ளது.

இது குறித்து மும்பையைச் சேர்ந்த உணவு ஏற்றுமதி நிறுவனமொன்றின் நிர்வாக இயக்குனர் கிருஷ்ணராவ் என்பவர் தகவல் வழங்கும் போது, இலங்கைக்கு இந்தியாவால் மட்டுமே விரைந்து உதவ முடியும். இதர நாடுகளில் இருந்து கடல் மார்க்கமாக எந்தவொரு பொருளையும் இலங்கைக்கு கொண்டு செல்ல பல வாரங்கள் தேவைப்படும். இந்தியாவில் இருந்து சில நாள்களில் இலங்கைக்கு நிவாரணப் பொருள்களை அனுப்ப முடியும்.

முதல் கட்டமாக இந்தியாவில் இருந்து 40 ஆயிரம் தொன் அரிசி இலங்கைக்கு அனுப்பப்பட உள்ளது. அடுத்த சில மாதங்களில் 3 லட்சம் தொன் அரிசி அனுப்பி வைக்கப்படும். இதன்மூலம் இலங்கையில் உணவுத் தட்டுப்பாடு குறையும். மேலும், அடுத்த சில வாரங்களில் இலங்கைக்கு தேவையான சர்க்கரை, கோதுமை போன்றவையும் அனுப்பி வைக்கப்படும், என்று குறிப்பிட்டிருக்கிறார்.

## மிசோரத்தில் புதிய வகைப் பன்றிக் காய்ச்சல் கண்டறிவு பன்றி இறைச்சிசார் பொருள்களின் இறக்குமதிக்கு தடை



மிசோரம் மாநிலத்தில் புதிய வகையான ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல் கண்டறியப்பட்டதை அடுத்து, பன்றிகள் மற்றும் பன்றி இறைச்சிப் பொருள்களை இறக்குமதி செய்ய அம்மாநில அரசு தடை விதித்துள்ளது.

அடுத்த உத்தரவு வரும்வரை, பிற மாநிலங்கள் மற்றும் பிற நாடுகளில் இருந்து உயிருள்ள பன்றிகள், பன்றி இறைச்சி மற்றும் பதப்படுத்தப்பட்ட இறைச்சி உட்பட அனைத்து பன்றி இறைச்சிப் பொருள்களுக்குமான இறக்குமதிக்கு முழுமையான தடை விதிக்கப்படும் என்று மிசோரம் அரசு அறிவித்துள்ளது.

மேலும், பன்றி வளர்க்கும் இடங்களில் கிருமி நீக்கம் செய்வதை உறுதி செய்வதோடு, கடுமையான சுகாதார மற்றும் சந்தேகத்திற்கிடமான பன்றிகளை தனிமைப்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகளை கால்நடை பராமரிப்புத்துறை மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பன்றிகள் ஏதேனும் அசாதாரணமாக உயிரிழந்தால் அதுகுறித்து உடனடியாகத் தெரிவிக்க உதவி தொடர்பு எண்களையும் மிசோரம் அரசு வழங்கியுள்ளது.



## எல்லை தாண்டி மீன்பிடித்த 12 மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கைது

தமிழக மீனவர்கள் இந்திய - இலங்கை கடல் எல்லை பகுதியான கச்சதீவு அருகே மீன் பிடிக்கும்போது எல்லை தாண்டி வந்து மீன் பிடிப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டு, இலங்கை கடற்படையினரால் விசைப்படகுகளுடன் சிறைப் பிடிக்கப்படும் சம்பவங்கள் அடிக்கடி நடைபெற்றுவருகின்றன.

சில நாள்களில் மீனவர்கள் விடுவிக்கப்பட்டாலும் அவர்களது விசைப்படகுகள் மட்டும் விடுவிக்கப்படுவதில்லை. இதனால், தமிழக மீனவர்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்படுவதாக குற்றச்சாட்டு உள்ளது.

இந்த நிலையில், நெடுந்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் 12 பேரை இலங்கை கடற்படை கைது செய்துள்ளது.

அவர்கள் அனைவரும் எல்லை தாண்டி மீன் பிடித்தனர் என கூறி கைது செய்யப்பட்டுள்ளனர் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## திடீரென உள்வாங்கிய திருச்செந்தூர் கடல் அதிர்ச்சி அடைந்து விலகிய பக்தர்கள்



திருச்செந்தூர் கடற்கரையில் நேற்று முன்தினம் ஏராளமான பக்தர்கள் குவிந்திருந்த வேளையில், திடீரென கடல் சில மீற்றர்கள் தூரம் உள்வாங்கியதால் கடலில் இருந்த பாறைகள் வெளியே தெரிந்தன. இதனால், கடற்கரைக்கு வந்த பக்தர்கள் அதிர்ச்சி அடைந்து விலகிச்சென்றனர்.

திருச்செந்தூர் கடல் திடீரென உள்வாங்கியதற்கு என்ன காரணம் என்று தற்போது ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது.

இந்தநிலையில், திருச்செந்தூரில் இன்று காலையிலும் கடல் 200 மீற்றர் தூரம் வரை உள்வாங்கியதில், பாறைகள் வெளியே தெரியத் தொடங்கின. இதனால், கடற்கரையில் இருந்த பக்தர்கள் அச்சமடைந்தனர்.

காலைக்கதிர் Kalaikathir மாலைப்பதிப்பு









# ‘நாங்க போற? நீங்க வாறா?’ போராட்டம் அட்டாளைச்சேனையில் மக்கள் எழுச்சி!

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் விளைவாகவும்,அரசின் இனவாதச் செயற்பாடுகளின் விளைவாகவும் மக்களுக்கு நேர்ந்துள்ள அவலங்களின் உணர்வலைகளை வெளிப்படுத்தி அரசுக்கு அழுத்தம் கொடுக்கவும், உடனடியாக இந்த நெருக்கடிகளுக்குத் தீர்வு வழங்குமாறு அரசை வற்புறுத்தியும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏற்பாடு செய்திருந்த மாபெரும் மக்கள் பேரணியும், பொதுக் கூட்டமும் கடந்த வெள்ளிக்கிழமை மாலை,கிழக்கு மாகாணத்தில், அம்பாறை மாவட்டத்தில் வெற்றிகரமாக இடம்பெற்றது.

மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்குமாறு வலியுறுத்தி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ‘நாங்க போற? நீங்க வாறா?’ –என்ற இந்தப் போராட்டத்தை எழுச்சி பூர்வமாக ஏற்பாடு செய்திருந்தது.

அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனை மீனோடைக்கட்டு சந்தியில் இருந்து ஆரம்பமான இப்போராட்டம் அட்டாளைச்சேனை நகரப்பகுதி வரை ஊர்வலமாகத் தொடர்ந்தது. அதில் சென்றோர் பல்வேறு சுலோகங்கள் வரையப்பட்ட பதாகைகளைத் தாங்கி சென்றனர். ஆயிரக்கணக்கான இளைஞர்கள், யுவதிகள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆதரவாளர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு பல்வேறு கோஷங்களை எழுப்பினர்.

இந்தப் போராட்டம் காரணமாக அக்கரைப்பற்று, கல்முனை மற்றும் அருகிலுள்ள பல வீதிகளில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதனை சீர் செய்யும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டனர். அத்துடன் இப்பிரதேசத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தமையுடன் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியின் இறுதியில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆவேசமான நீண்ட உரையொன்றையாற்றி, அரசின் பிற்போக்குத்தனமான நிருவாக செயற்பாடுகளால் நாடு வங்குரோத்து நிலையையடைந்து மக்களைச் சொல்லொணாப் பெருந்துயரில் ஆழ்த்தியுள்ளதைச் சுட்டிக்காட்டி கடும் விசனம் தெரிவித்தார்.

அரசுக்கு எதிரான மற்றும் மக்களின் உணர்வலைகளை வெளிப்படுத்தும் கோஷங்களைப் பேரணியில் கலந்து கொண்டோர் வழி நெடுகிலும்,பொதுக் கூட்டத்திலும் முழங்கினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாமளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கமும் உரையாற்றினார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் தவம், முன்னாள் கிழக்கு மாகாண சபை அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை, கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப், கல்முனை மாநகர பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.நிசாம் காரியப்பர், கல்முனை மாநகர சபை முன்னாள் முதல்வர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பிரதிப் பொருளாளர் ஏ.சி.யஹியாகான் உள்ளிட்ட பிரமுகர்கள் இப்போராட்டத்திலும் அதன் பின்னர் நடந்த பொதுக்கூட்டத்திலும் கலந்து கொண்டிருந்தனர்.

# நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு பங்களிக்க புத்திஜீவிகளுக்கு அழைப்பு

## உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் வேண்டுகோள்



நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யுமாறு, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ஏ. றமீஸ், கல்வியாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

இலங்கையின் உயர் கல்வியின் வளர்ச்சி குறிப்பிட்ட காலத்துக்குள் அதிகரித்துக் காணப்படுகிறது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தென்கிழக்கு பல்கலைக் கழகத்தில் வர்த்தக முகாமைத்துவ பீடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வியாபார நிர்வாகமாணி முகாமைத்துவ பட்டப் பின் படிப்புகற்கைநெறி அங்குரார்ப்பணவைபவம், பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வின் அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய உபவேந்தர் –

தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் பட்டப்பின் படிப்பை தொடர்பவர்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உந்து சக்தியாகத் திகழவேண்டும். இக் கற்கை நெறியினூடாக ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும். அந்த வகையில், இக் கற்கை நெறியை பயில்வதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள நீங்கள், இதன்மூலம் கூடிய வருமானத்தை பெறுவதோடு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பங்களிப்பு செய்ய முடியும். “கல்வியாளர் ஒருவர் தனது தொழிலுடன் மற்றும் நின்று விடாது மேற்படிப்புகளை மேற்கொள்வதன் மூலம் உலகளாவிய ரீதியில் பெரும் செல்வாக்கினை பெறுவதோடுஉயர்ந்ததொழில்வாய்ப்புகளையும் பெற முடியும்.

இலங்கையின் உயர்கல்வி வளர்ச்சிக்குதனதுபங்களிப்பை வழங்கி வரும் இப்பல்கலைக் கழகம், சர்வதேச மட்டத்தில் ஒரு முன்மாதிரியான பல்கலைக் கழகமாக மாறி, இலங்கையின் நிலையான அபிவிருத்திக்கு தனது பங்களிப்பை வழங்கி வருகின்றது – என்றார்.



# சாய்ந்தமருதில் மூதாட்டி படுகொலை: சந்தேகநபரை மடக்கினர் பொலிஸார்

(மாளிகைக்காடு நிருபர்)

அம்பாறை, சாய்ந்தமருதில் மூதாட்டி ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் தலைமறைவாக இருந்த சந்தேக நபர் இன்று கைது செய்யப்பட்டார். சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட இன்ஸ்பெக்டர் எஸ்.எல். சம்சுதீன் தலைமையிலான பொலிஸாரினால் மட்டக்களப்பில் வைத்து இவர் கைது செய்யப்பட்டார்.

சாய்ந்தமருது புதுப்பள்ளி வீதியிலுள்ள வீடொன்றில் தனித்து வசித்து வந்த 83 வயதுடைய சுலைமான் செய்யது புஹாரி என்னும் மூதாட்டியைக் கொலை செய்து விட்டு தலைமறைவாகி இருந்த கொலைச் சந்தேக நபரே இன்று மட்டக்களப்பு விடுதி ஒன்றில் வைத்து கைது செய்யப்பட்டார்.

மூதாட்டியிடம் இருந்த நகைகளை அபகரிக்கும் நோக்கில் இந்தக் கொலை நடந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்ட நிலையில் தலைமறைவாகி இருந்த சந்தேக நபரை பல நாள் தேடுதலின் பின்னர் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் சுற்றி வளைத்துக் கைது செய்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வாகரை ஸ்ரீ முத்துமாரியம்மன் மஹா கும்பாபிஷேகம் நிறைவு

## கௌரவிக்கப்பட்டார் ஸ்ரீநேசன்

வாகரை – புளியங்கண்டலடி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மஹா கும்பாபிசேக பெருவிழா கடந்த வியாழனன்று வெகு விமரிசையாக நடைபெற்றது. இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் புளியங்கண்டலடி ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலய நிர்வாக சபையினரால் கௌரவிக்கப்பட்டார்.

புராதன பெருமைகளைக் கொண்ட இவ் ஆலயமானது புனருத்தானம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து கடந்த 28 ஆம் திகதி ஆரம்பமான மஹா கும்பாபிசேக நிகழ்வுகள் மட்டக்களப்பு ஸ்ரீ ஆனைப்பந்தி சித்தி விநாயகர் ஆலய பிரதம குருக்கள் பிரம்மா ஸ்ரீ பிரபா தலைமையில் நடைபெற்றன. கடந்த செவ்வாய்க்கிழமை எண்ணெய்க்காப்பு நிகழ்வு இடம்பெற்றன.

மங்கள இசை முழங்க பக்தர்களின் அரோஹரா கோஷத்துடன் பிரதான கும்பங்கள் எடுத்து வரப்பட்டன. அதனைத் தொடர்ந்து மூல விக்கிரகத்துக்கு கும்பாபிகேம் நடைபெற்றது.

ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேக பெருவிழாவின் இறுதி நிகழ்வுகள் வியாழனன்று மாலை இடம்பெற்றன.

இதன்போது, நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்த காலப்பகுதியில் மேற்படி ஆலயத்தின் கட்டுமானப் பணிகளுக்கு எனத் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் ஊடாக ஒதுக்கீடுகளை செய்திருந்தமை, புளியங்கண்டலடி கிராமத்தில் உள்ள வீதிகளை அபிவிருத்தி செய்தமை மற்றும் சார்லஸ் விளையாட்டு கழகத்திற்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கியமை உட்பட சுமார் ஐம்பது லட்சம் ரூபா வரையிலான அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தமைக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஞா. ஸ்ரீநேசன் ஆலய நிர்வாக சபையினரால் கௌரவிக்கப்பட்டார்.

இதன்போது கோரளைப் பற்று பிரதேச சபையின் உறுப்பினர்களான நல்லரெட்ணம், கமலநேசன் மற்றும் இலங்கை தமிழரசுக் கட்சியின் வாகரை பிரதேச இணைப்பாளர் அலெக்ஸ் நிரோன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# எந்தச் சூழ்நிலையையும் கையாளும் திறன் இலங்கை பாதுகாப்புப் படைக்குள்ளது!

## என்கிறார் பாதுகாப்புச் செயலாளர்

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் எந்தவொரு சூழ்நிலையையும் கையாளும் திறன் இலங்கை பாதுகாப்புப் படைகளுக்கு உள்ளது.

இந்திய இராணுவத்தைச் சேர்ந்த எவரும் நாட்டுக்குள் நுழையவில்லை என்று பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

இலங்கையில் அசாதாரண சூழல் ஏற்பட்டுள்ளதால் இந்தியப் படைகள் நாட்டை வந்தடைந்துள்ளன என வெளியாகியுள்ள செய்திகளுக்கு மறுப்புத் தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே பாதுகாப்புச் செயலாளர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

இந்திய இராணுவத்தைச் சேர்ந்த எவரும் நாட்டுக்குள் நுழையவில்லை எனவும் இது தொடர்பில் சில இணையத் தளங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் ஊடாகப் பரப்பப்பட்டு வரும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என்றும் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பொய்யாக பரப்பப்பட்டு வரும் செய்திகளில் சித்திரிக்கப்பட்டுள்ள புகைப்படங்கள், கடந்த ஆண்டு நடைபெற்ற 'மித்ர சக்தி' என்று அழைக்கப்படும் இந்திய – இலங்கை கூட்டு இராணுவப் பயிற்சியின் போது வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ படங்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் இருதரப்பு கூட்டு இராணுவப் பயிற்சியில் பங்கேற்பதற்காகவே இந்த இந்திய இராணுவக் குழு இலங்கையின் மத்தள சர்வதேச விமான நிலையத்தை அப்போது வந்தடைந்தது என பாதுகாப்புச் செயலாளர் மேலும் விளக்கமளித்தார்.

மக்களைத் தவறாக வழிநடத்தும் நோக்கங்களுடன் வெளியிடப்படும் இதுபோன்ற தவறான தகவல்கள் தொடர்பில் பொதுமக்கள் வீணாகப் பீதியடைய வேண்டாம் என்றும் ஊடக நெறிமுறைகளைப் பேணி சகல ஊடகங்கள் ஊடாக வெளியிடப்படும் அறிக்கைகள் தொடர்பில் நம்பிக்கை வைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் எந்தவொரு சூழ்நிலையையும் கையாளும் திறன் இலங்கை பாதுகாப்புப் படைகளுக்கு உள்ளது எனவும் பாதுகாப்புச் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கைக்கான பயண ஆலோசனையை புதுப்பித்துள்ளது பிரித்தானிய அரசு

இலங்கையில் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசுக்கு எதிரான போராட்டங்கள் வலுப்பெற்றுள்ள நிலையில், பிரித்தானியா பயண ஆலோசனைகளை புதுப்பித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

டொலர் தட்டுப்பாடு காரணமாக, மருந்துகள், எரிபொருள் மற்றும் உணவு உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகளின் பற்றாக்குறையுடன் இலங்கையில் பொருளாதார நிலைமை மோசமடைந்து வருகின்றது.

பல்பொருள் வாணிபங்கள், எரிவாயு நிலையங்கள் மற்றும் மருந்தகங்களில் நீண்ட வரிசைகள் இருக்கலாம். மின்சாரமும் துண்டிக்கப்படுகின்றது. சமீபகாலமாக பல போராட்டங்கள் நடந்தன. கொழும்பில் தற்காலிகமாக ஊரடங்கு அமுல்படுத்தப்படுகிறது.

இன்னும் சில தினங்களில் நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அரசு பொது அவசரநிலையை அறிவித்தது, மேலும் 2 ஏப்ரல் 2022 அன்று மாலை 6 மணி முதல் 4 ஏப்ரல் 2022 காலை 6 மணி வரை நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ளது. மேலும், ஊரடங்குச் சட்டம் உட்பட உள்ளூர் கட்டுப்பாடுகள் குறுகிய அறிவிப்பில் விதிக்கப்படலாம். விழிப்புடன் இருக்க வேண்டும், ஆர்ப்பாட்டங்கள் அல்லது பெரிய கூட்டங்களைத் தவிர்க்கவும், உள்ளூர் அதிகாரிகளின் ஆலோசனையைப் பின்பற்ற வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மூன்றரை லட்சம் டொலர்கள் மோசடியை ஒப்புக்கொண்டார் ஜாலிய விக்கிரமசூரிய



2013 ஆம் ஆண்டு இலங்கை அரசு வொஷிங்டனில் புதிய தூதரகக் கட்டடத்தைக் கொள்வனவு செய்தபோது, இலங்கை அரசிடம் இருந்து 332,027 அமெரிக்க டொலர்களை மோசடி செய்த குற்றத்தை அமெரிக்காவிற்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய அமெரிக்க மாவட்ட நீதிமன்றம் ஒன்றில் ஒப்புக் கொண்டுள்ளார்.

இலத்திரனியல் பணப்பரிமாற்ற மோசடி (wire fraud) செய்த சதிக் குற்றத்தை இவ்வாறு அவர் ஒப்புக் கொண்டுள்ளார் என அமெரிக்க மாநில நீதித்துறை அறிவித்துள்ளது.

விக்கி ரமசூரிய தனது அதிகாரப் பதவியைப் பயன்படுத்தி தனது சொந்த அரசை ஏமாற்றி அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் நபர்களிடமிருந்து திருட முயன்றார், என்று நீதிமன்ற சிறப்புப் பொறுப்பாளர் ரே வில்லனுவேவா கூறினார். "அமெரிக்க அதிகாரிகள் இதில் தலையிடுவார்கள், நீதிமன்ற விசாரணைக்கு அழைப்பார்கள் என்று அவர் எதிர்பார்க்கவில்லை.

இன்று அவர் தனது குற்றங்களுக்கான பிரதிபலனை அனுபவிக்கத் தயாராகிறார் – என்றார் அவர். நேற்று முன்தினம் ஏப்ரல் 01 ஆம் திகதி, வயர் மோசடிக்குச் சதி செய்ததார் என்ற குற்றத்தை விக்கிரமசூரிய ஒப்புக்கொண்டார் என அதிகாரிகள் அறிவித்தனர்.

அவர் கொலம்பியா மாவட்ட நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளதாக, அமெரிக்க மாநில நீதித்துறை அறிவித்துள்ளது. இந்த குற்றச்சாட்டுக்கு அப்பிராந்திய சட்டப்படி உச்சபட்சம் ஐந்து ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை மற்றும் நிதி அபராதம் ஆகியன விதிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேர்ஜீனியாவின் ஆர்லிங்டனில் வசிக்கும் 61 வயதான ஜாலிய சித்ரன் விக்கிரமசூரிய, 2008 முதல் 2014 வரை இலங்கையின் அமெரிக்கா மற்றும் மெக்சிகோவுக்கான தூதுவராகப் பணியாற்றியிருந்தார்.

எதிர்வரும் ஜூலை 20, 2022ஆம் திகதி நீதிபதி டான்யா எஸ். சுட்கன் இந்த வழக்கின் தண்டனையை வழங்கத் திட்டமிட்டுள்ளார்.

# வவுனியா ஏ – 9 வீதியில் விபத்து: கனடா நாட்டு பிரஜை படுகாயம்!





வவுனியா ஏ – 9 வீதி கொக்குவெளி இராணுவ முகாம் அருகே நேற்று (சனிக்கிழமை) காலை 9.30 மணியளவில் ஹயஸ் ரக வான் மற்றும் ஓட்டோ நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் கனடா நாட்டு பிரஜை உட்பட இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ஹயஸ் ரக வாகனம் ஏ9 வீதி கொக்குவெளி இராணுவ முகாம் அருகே ஒரு வாகனத்தை முந்திச்செல்ல முற்பட்டபோது வாகனம் சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து எதிர்த்திசையில் வவுனியா நகரிலிருந்து நொச்சிமோட்டை நோக்கிப் பயணித்த ஓட்டோவுடன் நேருக்கு நேர் மோதி இரு வாகனங்களும் தடம்புரண்டு, விபத்துக்குள்ளாகின. இந்த விபத்தில் ஓட்டோ சாரதியான 43 வயதுடைய குடும்பஸ்தர் மற்றும் ஓட்டோவில் பயணித்த கனடா நாட்டு பிரஜையான 55 வயதுடைய நபர் ஆகிய இருவரும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளமையுடன் மேலதிக சிகிச்சைக்காக ஓட்டோ சாரதி அவசர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார். சம்பவ இடத்துக்குச் சென்ற வவுனியா போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமையுடன் ஹயஸ் ரக வாகனத்தின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551பு, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயராகி 03.04.2022இல் வெளியிடப்பெற்றது.